# முழுமையாக / பகுதியாக மயக்கமருந்து செலுத்தப்படும் நோயாளிகளுக்கான தகவல்கள்

**<u>உறுதியாக பின்பற்ற வேண்டிய வழிகாட்டிகள்</u>:**

எங்கள் ஊழியர்கள், குழந்தை உணவு உண்ணாது இருப்பது பற்றி உங்களுக்கு அறிவுரை வழங்குவார்கள். காலை உணவு உண்ணலாம் என்று அவர்கள் அனுமதித்தால், தயவுசெய்து வெறும் ரொட்டி, பால் அல்லது மைலோ கொடுக்கவும். அதன் பிறகு தண்ணீர் கொடுக்கலாம். ஆனால் அறிவுறுத்திய நேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

மயக்கமருந்து கொடுத்த பின்பு, இறுக்கம் தளர்ந்த ஒரு நிலையில், உண்ட உணவோ அல்லது திரவமோ வயிற்றில் இருந்து வாயை நோக்கி மேலே வந்து நுரையீரலுக்குள் இழுக்கப்படலாம். இது உயிருக்கு ஆபத்தாக முடியும். எனவே மயக்கமருந்து கொடுப்பதற்கு முன்பு, உண்ணாதிருப்பது கட்டாயமாகும். உலகம் முழுதும் இந்தமுறை தான் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

<u>இந்த வழிகாட்டுதல்களை நீங்கள் பின்பற்றாவிட்டால், உங்கள் குழந்தையின் நலம் கருதி, இந்த மருத்துவச் செயல்பாடே தள்ளிப் போடப்படலாம் அல்லது ரத்து செய்யப்படவும் கூடும்.</u>

இந்த மருத்துவச் செயல்பாடு காலதாமதமானால், திட்டமிடப்பட்ட நேரத்தை விடக் கூடுதலாக உங்கள் குழந்தை உண்ணாதிருக்க நேரிடும். இத்தகைய சூழல் நிகழாமல் முடிந்த அளவு நாங்கள் தடுக்க முயன்றாலும், முற்றிலும் தவிர்த்து விட முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

## ◊ <u>முழுமையாக மயக்கமருந்து செலுத்துதல் (ஜி. ஏ)</u>

முழுமையாக மயக்கமருந்து கொடுத்தல், இரண்டு முறையில் செயல்படுத்தப்படுகிறது.1]உங்கள் குழந்தையின் நரம்பில் பொருத்தப்பட்ட பிளாஸ்டிக் குழல் வழியாக மருந்தினைச் செலுத்துதல். 2] மூச்சுக்குழல் அல்லது ஒரு முகமூடி வழியாக மயக்கம் தரும் வாயுவினைச் செலுத்துதல். இவ்வாறு செய்வதானது அறுவைச் சிகிச்சையும் அது தொடர்பான மருத்துவச் செயல்பாடுகளும் நிகழும் காலம் வரை, உங்கள் குழந்தையைத் தூக்கத்தில் வைத்திருக்கும். ஒருவேளை குழந்தை அதிகமாக அச்சம் அடைந்தாலோ அல்லது கலக்கம் உற்றாலோ முன்னேற்பாடாக சில வகை மருந்துகளும் கொடுக்கப்படும். அறுவைச் சிகிச்சையை நல்லபடியாகச் செய்து முடிப்பதற்கு வலியைக் குறைக்கும் மாத்திரைகளும் மருந்துகளும் கொடுக்கப்படும்.

**முழுமையாக மயக்கமருந்து செலுத்துவதில் ஆபத்து ஏதேனும் உண்டா?**

மயக்கமருந்து செலுத்துவதானது இளம் குழந்தையாக இருந்தாலும்கூட மிகவும் பாதுகாப்பானது; இதில் ஏற்படும் ஆபத்து என்பது, குழந்தையின் மருத்துவ ரீதியான உடல் நிலையையும், அறுவைச் சிகிச்சையின் வகையையும் பொறுத்தது. சில நேரங்களில் பக்க விளைவுகள் தவிர்க்க இயலாது; ஆனால் பொதுவாக அவை தற்காலிகமானவைதான்.

| <u>தற்காலிகமான மற்றும் பொதுவான பக்க விளைவுகள்</u> | <u>அரிதாக வழக்கத்திற்கு மாறாக ஏற்படும் சிக்கல்கள்</u> |
|---|---|
| * தலைவலி, தலைச் சுற்றல்<br>* குமட்டல், வாந்தி<br>* ஊசி போட்ட இடங்களில் வலியோ காயமோ ஏற்படுதல்<br>* தொண்டைப் புண்<br>* மயக்கம் மற்றும் குறுகிய காலத்திற்கு நினைவு இழத்தல்<br>* உடல் நடுக்கம் (அ) பல் நடுக்கம்<br>* மயக்கத்திலிருந்து மீளும் போது பிதற்றல், அமைதியற்ற நிலை; கட்டுப் பாடின்றி வேகமாக அங்கும் இங்கும் அசைதல்; தேற்ற முடியாதவாறு கத்தி அழுவது<br>* தோல் நாடா காரணமாகத் தோல் சிவத்தல் அல்லது வடுக்கள் ஏற்படுதல் | * விழித்தே இருத்தல்<br>* பல், உதடு, நாக்கு ஆகியவற்றில் சேதம்<br>* குரல் வடத்தில் சேதம்<br>* ஒவ்வாமை<br>* நரம்புகளில் சேதம் அல்லது அழுத்தம்; பகுதிகளில் சேதம் அல்லது புண்<br>( **குறிப்பாக இதய அறுவைச் சிகிச்சை நிகழும்போது அல்லது அதிக நேரம் எடுக்கும் மற்ற அறுவைச் சிகிச்சையின் போது)**<br><br>**<u>மிகவும் அரிதான நிகழ்வும் ஆபத்தான சிக்கல்களும்</u>**<br><br>* மிகவும் தீவிரமான ஒவ்வாமை (அ) குறைந்த ரத்த அழுத்தம்.<br>* மீவெப்பப் புற்று<br>* வயிற்றில் இருக்கும் பொருட்கள் நுரையீரலுக்குள் சென்று நிமோனியா ஏற்படலாம் |

***முழுமையாக மயக்கமருந்து கொடுப்பதால் நரம்பு வளர்ச்சியில் ஏற்படும் நீண்ட காலப் பக்க விளைவுகள் குறித்து இதுவரை அறியப்படவில்லை.**

◊ **ஊடுறுவிக் கண்காணித்தல்**

உங்கள் குழந்தை மிகவும் ஆபத்தான நிலையில் நோய் வாய்ப்பட்டாலோ அல்லது பெரிய அறுவைச் சிகிச்சைக்கு உட்பட நேரும் போதோ ஊடுறுவித் தகவல்களைத் திரையில் காட்டும் கருவி பயன்படுத்தப்படும்.

**ரத்த அழுத்தம்**

உங்கள் குழந்தையின் ரத்த அழுத்த அளவை மிகத் துல்லியமாகக் கண்டறிவதற்கு ரத்த குழாய்க்குள் ஒரு மெல்லிய வடிகுழலைப் பொருத்த வேண்டியது வரும். இதன் மூலம், தேவைப்பட்டால் சோதனை செய்ய ரத்தம் எடுத்துக் கொள்ளவும் படும். இச் செயல்களால் ரத்த நாளங்களிலோ அல்லது சுற்றியுள்ள பகுதிகளிலோ காயமும் ரத்த உறைவும் கூட ஏற்படலாம்.

**பெரிய ரத்தநாளங்களில் பொருத்தப்படும் வடிகுழாய்**

உங்கள் குழந்தையின் கழுத்து, மார்பு (அ) இடுப்பு வழியாக, ஒரு பெரிய துவாரமுள்ள வடிகுழல், பெரிய நரம்பு ஒன்றில் பொருத்தப்படும். அது இதயம் வரைச் செல்லும். இதன் வழியாக உங்கள் குழந்தையின் இதயத்திலுள்ள ரத்தத்தின் அளவையும், இதயத்தின் இயக்கத்தையும் நன்றாக அறியமுடியும்; மேலும் தேவைப்படும் போது மருந்துகளையும் திரவங்களையும் செலுத்திக் கொள்ளலாம்; இதனால் சிக்கலான சில விளைவுகளும் ஏற்படலாம் அவை கவனக் குறைவினால் ரத்தக்குழாய் அல்லது நுரையீரல் துளை; இரண்டு, ரத்த உறைவு; (அ)இதயத்துடிப்பு வேறுபடுதல்.

இவற்றைவிட மிகவும் அரிதான சிக்கல்களும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது; அவை, நரம்புச்சேதம், மார்பிலிருந்து கசிவுநீர் கொண்டு செல்லும் நாணத்தில் சேதம், நரம்பில் பொருத்தப்பட்ட வடிகுழல் இடம் பெயர்ந்து விடுதல். இத்தகைய சிக்கல்கள் ஏற்படும்போது மிகவும்அரிதாக மரணம் ஏற்படவும் வாய்ப்புண்டு.

◊ **பகுதி மயக்கமருந்து செலுத்துதல்**

**வகைகள்: ------------------------------------------------------------------------------------------------**

◊ **புறநரம்பு மரப்பதற்கு மருந்து செலுத்தப்பட்ட நோயாளிக்கான அறிவுரைகள்:**

பகுதி மயக்கமருந்து என்றால், அறுவைச் சிகிச்சை நடக்கும் உடல் பகுதியிலிருந்து வலி உணர்வை எடுத்துச் செல்லும் நரம்புகளைச் சுற்றி வட்டார மயக்கமருந்து ஊசியைப் போடுவதாகும்; இது அறுவைச் சிகிச்சை நடக்கும் போதும், அதற்குப் பிறகும் ஏற்படும் வலியிலிருந்து நிவாரணம் பெறப் பயன்படும். அறுவைச் சிகிச்சை நடக்கும் இடத்தைப் பொறுத்துப் பகுதி மயக்கமருந்து கொடுக்கப்படும் இடம் தேர்ந்தெடுக்கப்படும்; அதற்குத் தகுந்தவாறு சிக்கல்களும், அறிவுறுத்தல்களும் உங்களோடு கலந்துரையாடப்படும். பகுதி மயக்கமருந்தை, குழந்தையின் வயது மற்றும் மருந்துச் சிக்கலுக்கு ஏற்ப, முழு மயக்கத்திலேயோ அல்லது விழித்திருக்கும் போதோ கொடுக்கப்படும்.

**பகுதி மயக்கமருந்து கொடுத்தலின் பொதுவான வகைகள்**

அ. புறநரம்பு மரப்பு ஊசி :(எ.டு) ஆண்குறி நரம்பு, தொடை நரம்பு முதலியன
ஆ. நரம்புத்தண்டு மரப்பு ஊசி : (எ.டு) தண்டுவட மேலுறை, வால்பகுதி (அ) முதுகெலும்பு உணர்வின்மை

தண்டுவட மேலுறை உணர்வின்மை எனப்படும் போது, இதற்கென்றே சிறப்பாக அமைந்த ஓர் ஊசியைத் தண்டு வடத்திற்கும் முதுகு எலும்பிற்கும் இடைப்பட்ட பகுதியில் பொருத்துவர்; இதன் வழியாக சிறிய வடிகுழல், தண்டுவட மேலுறையில் பொருத்தப்படும். வட்டார மயக்கமருந்து மற்றும் வலி நிவாரண மருந்து ஆகியவற்றை வடிகுழல் வழியாகச் செலுத்தினால் வலியில் இருந்து தொடர் நிவாரணம் பெறமுடியம். அறுவைச் சிகிச்சை முடிந்த பிறகும் இந்த வடிகுழலை அதே இடத்தில் சில நாட்கள் தொடர் வலி நிவாரணத்திற்காக விட்டு வைத்திருக்கலாம்.

வால்பகுதி உணர்வின்மை என்பது குழந்தையின் முதுகெலும்பின் அடிப்பகுதியில் மயக்கமருந்து செலுத்துதல் ஆகும்; பொதுவாக ஒரே ஊசியில் இது செலுத்தப்படும். சில நேரங்களில் அறுவைச் சிகிச்சை முடிந்தவுடன் அதே ஊசி மீண்டும் போடப்படவும் கூடும். தண்டுவட மேலுறைக்குச் சிகிச்சை அளிக்கும்போது செய்தது போலவே ஒரு இடத்தில் வடிகுழலை விட்டு வைக்கவும் செய்யலாம்.

**இவற்றில் ஏதாவது ஆபத்து நிகழுமா?**

பகுதி மயக்க மருந்தின் விளைவுகள் அறவே நீங்குவதற்கப் பல மணி நேரம் ஆகலாம். எனவே மயக்க மருந்து செலுத்தப்பட்ட உடல் பகுதி உணர்வற்று இருக்கும் நிலையில், அந்த இடத்தில் எதிர்பாராமல் காயம் ஏற்படாமல் இருப்பதற்கு மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும். நரம்புத் தண்டு மரப்பு ஊசி வகைச் சிகிச்சை எடுத்துக் கொள்ளும்போது, உணர்ச்சி இன்மை நீங்கும் வரையும், காலில் சக்தித் திரும்ப வரும் வரையும் நடக்கக்கூடாது; மிகவும் அரிதாக நரம்பு மரத்தல் முழுமையான பயன் இல்லாமலோ அல்லது அரைகுறையாகவோ மரத்துப் போக வாய்ப்புண்டு.

| **பொதுவான பக்க விளைவுகள் (வழக்கமாய்த் தற்காலிகமாக)** | **ஆபத்தான ஆனால் அரிதாக நிகழும் பக்க விளைவுகள்** |
|---|---|
| * கால்களில் உணர்ச்சி இன்மை அல்லது கூச்ச உணர்வு<br>* உணர்ச்சியற்ற பகுதியில் தசைத் தளர்ச்சி<br>* நடுக்கம்<br>* அரிப்பு<br>* முதுகுவலி; ஊசி போட்ட இடத்தில் சிராய்ப்புக் காயம்<br>* மூத்திரம் பெய்ய முடியாமை<br>* தலைச்சுற்றல், தலைவலி<br>* குறைந்த ரத்த அழுத்தம்(இது குழந்தைகளுக்கு ஏற்படுவது அரிது) | * மயக்க ஊசி போட்ட இடத்தைச் சுற்றிச் சேதம் ஏற்படுதல்<br>* நரம்புச் சேதம்<br>* ரத்தம் உறைதல்<br>* வலிப்பு வருதல்<br>* மூச்சுத் திணறல்<br>* தொற்றுநோய், சீழ்க்கட்டி உருவாகுதல்<br>* மாரடைப்பு |

◊ **அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு மேற்கொள்ள வேண்டிய சிறப்புக் கவனம்: தீவிரச் சிகிச்சைப் பிரிவு (ஐ.சி.யு): முழுவதும் சார்ந்திருக்கும் பிரிவு (ஹெச்.டி)**

* தீவிரக் கண்காணிப்பும், மூச்சு விடுவதற்கும் இதயத் துடிப்பிற்கும் புறக்கருவிகளின் துணையும், கட்டாயம் தேவைப்படும் பட்சத்தில் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, தீவிரச் சிகிச்சைப் பிரிவு அவசியமாகும்.
* அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, மிக நெருக்கமான கண்காணிப்புத் தேவைப்படும் குழந்தைகளுக்கு, முழுவதும் சார்ந்திருக்கும் பிரிவு தேவைப்படும் (ஹெச்.டி)

◊ **மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகள்: மிகவும் தீவிரமான நோய்; மிக மிக இளமையான குழந்தைகள்:**

மிகவும் தீவிரமான நோயுடைய ஒரு குழந்தை அறுவைச் சிகிச்சை மேற்கோள்வதற்கு முன்பே மிகவும் ஆபத்தான சிக்கல்களுக்கு உள்ளாவதும், இறந்து போவதுமான நிகழ்வுகள் பெரிதும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் மயக்க மருந்து கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் / ஆபத்துகள் ஆகிய இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவு எடுப்பது நல்லது.

எனவே, உங்கள் குழந்தைக்கான மயக்கமருந்து மருத்துவர் அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கு முன்பு செய்ய வேண்டிய கவனமான செயல்பாடுகளைப் பற்றி, உங்களோடும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள இருக்கிற மருத்துவர் குழுவினரோடும் கலந்துரையாடி அறிவுரை வழங்குவார்.

◊**வேறு பல ஆபத்துக்கள்:**----------------------------------------------------------------------